**யார் இந்த புதுச்சேரி உழவர்கரையை சேர்ந்த சமூக சேவகர் முனைவர் அருள் செழியன்!**

நாமும் தெரிந்து கொள்ளலாமே! நீங்கள் கேட்கலாம்!!! ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் என்று???



சிறு துன்பத்திற்கே உயிரை மாய்த்துக் கொள்ளும் இளம் தலைமுறையினர் மத்தியில், தான் கடந்து வந்த பல இன்னல்களை, சவால்களாக மாற்றி, இன்று அவர் ஜெயித்துக் கொண்டிருக்கும் பாதையின் வெளிச்சம், பிறருக்கு ஒரு வழிகாட்டுதலாக இருக்க வேண்டும்!
முன்னுதாரணமாக வாழ வேண்டும்! என்ற இலக்கை நோக்கி தன் பயணத்தை மேற்கொண்டு இருக்கிறார் **முனைவர் திரு.ர.அருள்செழியன்!**
பிரச்சனை என்பது அனைவருக்கும் உண்டு! பிரச்சினையை காரணம் காட்டி கெட்டுப் போவதை விட ,போராடி அதிலிருந்து "**சுயம்பு**" போல் மீண்டு வருவது தான் சிறப்பு!

**இதோ அவரின் சிறப்புகள்!**

புதுச்சேரி மாநிலம், திரு.ரவீந்திரன் (சார்பு செயலர் ஓய்வு - புதுச்சேரி அரசு) மற்றும் அன்புக்கரசி (இல்லத்தரசி) தம்பதியினருக்கு அக்டோபர் 28 அன்று புதுச்சேரியில் பிறந்தவர்.
மூத்த சகோதரி - எம்.டி ரேடியாலஜி டாக்டர். அவர் அவருடைய குடும்பத்துடன் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கணவன் மற்றும் மகளுடன் வாழ்ந்து வருகிறார்.

2012ல், திரு. அருள் செழியன் - உதயா இவர்களின் காதல் திருமணம் நடைபெற்றது. ஆனால் 2017ல் இயற்கைக்கு மாறான இறப்பை திருமதி.உதயா அவர்கள் சந்தித்தார். தற்போது திரு.அருள்செழியன் அவர்களுக்கு 7.5 வயதில் ,ரிஷி ஆத்ரேயா என்ற மகன் உள்ளார், தன் மனைவியின் இறப்பை தாங்கிக்கொண்டு, சமூகப் பணியை தொடர்ந்து செய்ய விரும்பி, தன் மனைவியின் நினைவாக “**அன்பு ஆத்ரேயா**” என்ற அறக்கட்டளையின் மூலம் நன்கொடைகள் எதுவும் பெறாமல், தனது மாத வருமானத்தை ஏழை எளிய மக்களுக்கு ,பல தரப்பட்ட உதவிகளை தொடர்ந்து செய்து வருகிறார் .
மேலும் பல, ஆதரவற்ற இல்லங்கள், முதியோர் இல்லங்கள், மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இல்லங்கள் போன்றவற்றிற்கு வருடம் தோறும் அனைத்து முக்கிய தினங்களிலும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவு

கொடுப்பது வழக்கமாக கொண்டுள்ளார். இதனுடன் தனது சொந்த செலவில் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி கட்டணம் செலுத்தி வருகிறார். இது போன்ற அறப்பணிகள் கணக்கில் அடங்காதது...

**அவரது சேவை பயணங்கள்:**

●2015 சென்னை வெள்ளத்தின் போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 200 குடும்பங்களுக்கு நிவாரண பொருட்களை ஏற்பாடு செய்து, பெங்களூரில் இருந்து டிரக்கில் தனது நண்பர்களின் உதவியோடு அனுப்பிவைத்தார் . பாய், படுக்கை விரிப்புகள், பிஸ்கட்கள், சமைப்பதற்கு எளிதான உணவுப் பொருட்கள், செருப்புகள், தண்ணீர் பாட்டில்கள் சானிட்டரி பேடுகள், பல் துலக்குதல், பேஸ்ட் சோப்புகள் போன்ற அன்றாடத் தேவைகள் இதில் அடங்கும்.

● தமிழ்நாட்டின் திருச்சிக்கு அருகிலுள்ள நடுக்காட்டுப்பட்டி என்ற கிராமத்தில் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சுஜித் வில்சன் என்ற இரண்டு வயது சிறுவன் கைவிடப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் விழுந்து அக்டோபர் 26, 2019 அன்று இறந்தான் -> அதில் விழும் குழந்தைகளைக் காப்பாற்ற ஒரு வேலை மாதிரியை உருவாக்கினார். ஆழ்துளை கிணறு மற்றும் மாதிரியை தமிழக அரசிடம் சமர்ப்பித்தார்.

●ஏப்ரல் 2017 இல் நடந்த தமிழ் விவசாயிகளை காப்பாற்றுங்கள் இயக்கத்தில் பங்கேற்று, டெல்லியில் போராட்டம் நடத்திய தமிழக விவசாயிகளை காப்பாற்றுமாறு பிரதமர் அலுவலகம் மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்கு பல கோரிக்கைகளை முன்வைத்தார்.

●ஜல்லிக்கட்டுக்கான தடையை எதிர்த்து 19-01-2017 அன்று பெங்களூரு டவுன்ஹாலில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு இயக்கத்திலும் கலந்து கொண்டார்.

●தொற்று நோய் காலத்தில் காவல் பணியின் செயல்பாடு, மற்றும் மீள்திறனுக்காக காவல்துறை பணியாளர்களின் ஆரோக்கியம், நல்வாழ்வு மற்றும் மன உறுதி, என்பது போன்ற பல மாநாடுகளை, இணைய வழியாக இந்தியாவில் உள்ள உயர் காவல்துறை தலைவர்களோடு விவாதங்களில் பங்கேற்று தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

●நாட்டில் நடக்கும் கற்பழிப்பு சம்பவங்களுக்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி இந்திய பிரதமர் மற்றும் குடியரசுத் தலைவர் அனைத்து மத்திய அமைச்சகங்களுக்கும் கடிதங்கள் எழுதினார்

●ஒவ்வொரு ஆண்டு ஜூன் 26 அன்று சர்வதேச போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான தினத்தில் பங்கேற்பதை வழக்கமாக கொண்டுள்ளார்.

●ஒவ்வொரு ஆண்டும் 5 புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு அவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டை ஈடுகட்ட UNICEF-க்கு மாதாந்திர பங்களிப்பு 1500 ரூபாய் ஒரு குழந்தை வீதம் அவர் செலுத்து வருகிறார் .

**அன்பு ஆத்ரேயா அறக்கட்டளை மூலமாக தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் சேவைகள்:**

●மே 2020 கொரோன தோற்று காலகட்டத்தில் புதுவை ரெட்டியார்பாளையம் பகுதியில் வேலை செய்யும் துப்புரவு பணியாளர்கள் தலா 30 பேருக்கு ஒரு மாதத்திற்கான மளிகை பொருட்கள்

●மே 2020 கொரோன தோற்று காலகட்டத்தில் கணவனை இழந்த பெண்கள் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் சுமார் 20 குடும்பத்திற்கு, ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்கள்

●ஜூன் மாதம் கொரோன தோற்று காலகட்டத்தில், வேலையில்லாமல் இருந்த புதுவை ரெட்டியார் பாளையம் கம்பன் நகர் ஆட்டோ ஓட்டுநர்கள் 35 பேருக்கு, அவர்கள் குடும்பத்திற்கு தேவையான ஒரு மாதத்திற்கான தினசரி உபயோகப்படும் மளிகை பொருட்கள் அனைத்தையும், தனது சொந்த செலவில் வழங்கினார்.

●ஜூலை 2021 கொரோன தோற்று காலகட்டத்தில் புதுச்சேரி உழவர்கரை பகுதியில் வசித்து வந்த 18 ஒட்டர்கள் குடும்பத்திற்கு தேவையான மாதாந்திர மளிகை பொருட்களை வழங்கினார்.

●இதற்கிடையில் பல விசேஷ நாட்களில், புதுச்சேரி ,தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் உள்ள பல காப்பகங்களுக்கு உணவு, உடை ,இனிப்புகள் பட்டாசுகள், விளையாட்டு பொருட்கள் ,மளிகை பொருட்கள் என பல உதவிகளையும் செய்து வந்தார்.

●டிசம்பர் 2021 புதுவை ரெட்டியார் பாளையம் கம்பன் நகரில் பிரதான சாலை மிக மோசமாக இருப்பதைக் கண்டு அதனை உடனே சரி செய்ய வேண்டும் என்று தனது நண்பர்களோடு சேர்ந்து தனது சொந்த செலவில் பிரதான சாலையை இரவோடு இரவாக சரி செய்து முடித்தார்

●ரெட்டியார் பாளையம் பகுதியில் உள்ள பல ஆலயங்களுக்கு நன்கொடைகளையும் ஆலய விழாக்களை சிறப்பாக நடத்தியும் சிறப்பித்தார்.

●புதுச்சேரி ரெட்டியார் பாளையம் பகுதியில் ஏப்ரல் 2022-ல் கோடை வெப்பம் அதிகமாக இருந்த காரணத்தினால் இலவச நீர்மோர் மற்றும் தண்ணீர் பந்தல் அமைத்து சுமார் மூன்று மாதங்களுக்கு மக்களுக்காக தனது சொந்த செலவில் இலவசமாக வழங்கி வந்தார்

●மே மாதம் 2022-ல் புதுவை ரெட்டியார் பாளையத்தில் மக்கள் நிழற்குடை இல்லாமல் கோடை வெப்பத்தை எதிர்கொள்ள முடியாமல் இருந்ததை மிகுந்த வேதனையுடன் மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு, தன் சொந்த செலவில் புதுவையிலேயே முதன்முறையாக தற்காலிக நிழற்குடை அமைத்தார். கோடை வெயிலின் தாக்கம் குறைந்தும் மழைக்காலத்திலும் சுமார் ஆறு மாதத்திற்கு மேலாக நிழற்குடை மக்களால் பயன்படுத்தப்பட்டது.

●ஆகஸ்ட் 2022-ல், புனித சூசையப்பர் அரசு பள்ளி மாணவ மாணவிகள் சுமார் 300க்கும் மேற்பட்டோருக்கு தேவையான ஒரு வருடத்திற்கான கல்வி உபகரணங்கள் வழங்கினார்.

●அக்டோபர் 2022 புதுவை ரெட்டியார்பாளையம் கம்பன் நகர் பிரதான சாலை சரி செய்து சில மாதங்கள் ஆன பிறகு, மறுபடியும் தனது சொந்த செலவில் ,அந்த முழு பிரதான சாலையையும் சரி செய்தார்.

●ரெடியார் பாளையம் அன்னை ஸ்ரீ மகாலட்சுமி ஆலயத்தை தனது சொந்த செலவில், உழவாரப்பணி செய்து ஆலயத்தை புதுப்பித்து, ஆலய செயலாளராகவும் தனது சேவையை தொடர்ந்தார்.

●அக்டோபர் 2022-ல் புதுவை உழவர்கரையை சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உடை மற்றும் அவர்களுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

●உழவர்கரை பகுதியில் மூன்று சிறிய வீடுகளைக் கட்டுவதற்கு முழுமையான கட்டுமானப் பொருட்கள்ளை தனது சொந்த செலவில் வழங்கினார்.

●டிசம்பர் 2022-ல் வறுமையால் வாடி தனது குடும்பத்தை காப்பாற்றிக் கொள்ள உதவிட, ஆட்டோ ஒன்றை வாங்கி வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்ள உதவினார்.

●ஏப்ரல் 26 2023, தன் அறக்கட்டளையின் சார்பில் ,மகான் எலுமிச்சை ராமசாமி சித்தர் பீடம் மூலம் ,வடலூர் ஸ்ரீ ராமலிங்க சுவாமி சன்மார்க்கத்திற்கு ,நிதி உதவி செய்து அனைத்து பக்தர்களுக்கும், துறவிகளுக்கும், சாதுக்களுக்கும், நாள் முழுவதும் தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு **உணவு** வழங்க ஏற்பாடு செய்தார்.

●இளைஞர்கள் விளையாட்டில் ஆர்வம் செலுத்த பல இளைய சமுதாயத்தினருக்கு,விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

●உழவர்கரையில் அமைந்துள்ள, புனித அந்தோனியார் ஆலயத்தில் ஜூன் 26 2023 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஊர் பொதுமக்கள் அனைவரும் மகிழும் அளவில் உணவு அளிக்கப்பட்டது.

●தீபாவளி பண்டிகை முன்னிட்டு புதுவை ரெட்டியார் பாளையம் மற்றும் உழவர்கரையை சேர்ந்த ஏழை எளிய மக்களுக்கு பட்டாசு பெட்டிகளும் இனிப்புகளும் தனது சொந்த செலவில் வருடம்தோறும் வழங்கி வருகிறார்..

●சென்னையை சேர்ந்த தன்னார்வ தொண்டு அமைப்புகள் மூலம், மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் வழங்கினார்.

●பிப்.2.2024 உழவர் கரை புனித சூசையப்பர் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்ததன் மூலம், அனைத்து பள்ளி மாணவ மாணவிகளும் பயன்பெற்றனர்.

● பிப்.2024 அன்று அன்பாலயா காப்பகத்தில் மருத்துவ பரிசோதனைகள் முகாம் அன்பு ஆத்ரேய அறக்கட்டளை மூலம் நடைபெற்றது .

●மதுரை காமராஜ் பல்கலைக்கழக சார்பு , பாத்திமா கல்லூரியில் எம் ஏ பட்டம் படிக்கும் மாணவி ,சுரேகா அவர்களின் ,ஒரு வருடத்திற்கான படிப்பு செலவு தொகையை தன் அறக்கட்டளையின் மூலம் வழங்கினார்.

●மார்ச் 4 ,2024 புதுச்சேரி மாநிலம் உழவர்கரை இரண்டாவது தெருவில் புதிதாக வைக்கப்பட்டுள்ள மின்கம்பங்கள் வைப்பதற்கான பொருள் உதவி அனைத்தும் (பள்ளம் எடுத்தது கிரேன் போல்ட் நட் மற்றும் அனைத்து இதர செலவுகள்) தன் அறக்கட்டளையின் மூலம் வழங்கப்பட்டது.

●மே 2024 உழவர்கரை புனித ஜெயராகினி அன்னை ஆலய, 39 ஆம் ஆண்டு பெருவிழா அன்று கொடியேற்றுத்துடன் தொடங்கிய, இந்த நிகழ்ச்சியில் ,தன் அறக்கட்டளையின் மூலம் பொதுமக்களுக்கு குளிர்பானங்கள் வழங்கப்பட்டது.
● மேலும், வீதிகளை அலங்கரிக்க சுமார் 150 மின்விளக்குகளை நன்கொடையாக அளிக்கப்பட்டது.

●புதுச்சேரியின் மூலகுளத்தில் ஒரு துரித உணவு மையத்தைத் திறக்க ஒரு வசதியற்ற நபருக்கு வாகனத்தை நன்கொடையாக வழங்கினார்.

● பல தரப்பட்ட ஏழைகளுக்கு, கோரிக்கையின் பேரில் பண உதவி சரியான நேரத்தில் தன் அறக்கட்டளையின் மூலம் செய்யப்பட்டது.

●உடல் ஊனமுற்றோருக்கு, சக்கர நாற்காலி, கைத்தடி போன்றவை தன் அறக்கட்டளையின் மூலம் வழங்கப்பட்டது.

●உழவர் கரை பகுதியில் அமைந்துள்ள அனைத்து கோவில்கள், தேவாலயங்கள் போன்றவற்றில் நடக்கும், அனைத்து நிகழ்ச்சிகளுக்கும், தேவையான உபகரணங்கள் தன் அறக்கட்டளையின் மூலம் வழங்கினார்.

●புதுச்சேரி புதுநகரில் விஷவாயு கசிவு காரணமாக ஏற்பட்ட ஒரு துயர சம்பவத்தின் போது,3 உயிர்கள் பலியாகின. அந்த இடத்தை ஆய்வு செய்து புதுச்சேரி அரசுக்கு அவர்களின் மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்க, அவர் ஒரு ஆராய்ச்சி குழுவை (டாக்டர். ரணதேவ் ஆனந்த் மற்றும் டாக்டர். காயத்ரி) ஏற்பாடு செய்தார்.

● விஷ வாயு கசிவு சம்பவத்தின் போது, ஒரு அவசர உதவி ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்து, எந்த அவசர சூழ்நிலைக்கும் தயாராக வைத்திருந்தார்.

●கனமழை மற்றும் இயற்கை பேரிடர்களின் போது ,அவர் மக்களுக்கு உணவு மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கினார். வின்சென்ட் நகர்,வசந்தராஜா தியேட்டர் ,உழவர்கரை மற்றும் பல முக்கிய பகுதிகள் இதில் அடங்கும்.

● ஃபெங்கால் புயலின் போது சரியான நேரத்தில், தார்பாய்கள் உணவு மற்றும் மளிகை பொருட்கள் உழவர்கரை பகுதியில் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

●இயற்கை பேரிடர்களால் சேதமடைந்த பல வீடுகளுக்கு, முழுமையான மின் சாதனங்களை நன்கொடையாக வழங்கப்பட்டன.

●ஒவ்வொரு ஆண்டும் பாண்டிச்சேரியின் பல்வேறு பகுதிகளிலிருந்து, நடைப்பயணமாக அன்னை வேளாங்கண்ணிக்கு வருகை தரும் பக்தர்களின் முழு செலவையும் நன்கொடையாக வழங்குவதை வழக்கமாக வைத்துள்ளார்.

குறிப்பு:
**தனித்து நின்று பல சமூக சேவைகளை செய்து வந்த நிலையில், மார்ச் மாதம் 2023 தன்னை அதிமுகவில் புதுச்சேரி மாநில செயலாளர் திரு அன்பழகன் மூலமாக தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியின் தலைமையில் இணைந்தார்.**

**அன்பு ஆத்ரேயாஅறக்கட்டளை மூலம் டாக்டர். ர.அருள்செழியன் அவர்களிடமிருந்து மாதாந்திர அடிப்படையில் நன்கொடைகள் மற்றும் உதவிகள் பெறும் அறக்கட்டளைகளின் விபரங்கள்:**

●ஸ்பூர்திதாமா அறக்கட்டளை பெங்களூரு
●எஸ்.ஜே.டி.எஸ் - உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி, விழுப்புரம், தமிழ்நாடு.
●மதர்தெரேசா நவசேதனா அறக்கட்டளை. பெங்களூர்
●இந்தியாவில் சமூக சுகாதார சங்கம்,புதுச்சேரி
●மனகுலார் அறக்கட்டளை, சென்னை
●அரிச்சுவடி மனநல மையம் பாண்டிச்சேரி
●கருணை இல்லம் பப்ளிக் சாரிடபிள் டிரஸ்ட் வேளச்சேரி, சென்னை
●பேபிசாரா இல்லம் , புதுச்சேரி
●பாலாலயம் இல்லம் ,புதுச்சேரி
●வாத்சல்யா சாரிட்டபிள் டிரஸ்ட் பெங்களூர்
●செயின்ட் ஜான் ஸ்பெஷல் சில்ரன் விழுப்புரம் தமிழ்நாடு
●அன்னை பாரத மாதா எஜுகேஷனல் மற்றும் சாரிடபிள் டிரஸ்ட் ரெட்ஹில்ஸ் சென்னை
●மேரி ஹோம் ஃபார் ஆர்ப்பன் சில்ட்ரன் திருப்பூர் தமிழ்நாடு
●லைட் ஹவுஸ் டிரஸ்ட் ஊத்துக்கோட்டை திருவள்ளூர் டிஸ்ட்ரிக்ட் சென்னை
●அன்னை இல்லம் வாணி சத்திரம் சென்னை
●ஊனமுற்றோர் மறுவாழ்வு சங்கம், திருவண்ணாமலை
●விழுதுகள் அறக்கட்டளை, புதுச்சேரி
●கார்டியல் பவுண்டேஷன் அண்ட் டிரஸ்ட் ஹூப்ளி கர்நாடகா.
●நிசார்கா சாரிட்டபிள் டிரஸ்ட், கெங்கேரி, பெங்களூர்.

**அன்பு ஆத்ரேயா அறக்கட்டளை மூலமாக, நன்கொடைகள் மற்றும் நிதியுதவிகளைப் பெறும் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சங்கங்கள்:**

- G.R. பெட்டாங்க் கிளப் பிச்சவீரன்பேட்,,புதுச்சேரி.
- P.Y.கிங்ஸ், உழவர்கரை ,புதுச்சேரி.
- P.L.D.பெட்டாங்க் கிளப் ,உழவர்கரை, புதுச்சேரி.
- உழவர்கரை F.A. கிளப், உழவர்கரை , புதுச்சேரி.
- ஓ.பி.சி பெட்டாங்க் கிளப் ,உழவர்கரை, புதுச்சேரி
- P.V. பெட்டாங்க் கிளப் பிச்சவீரன்பேட்,புதுச்சேரி.
- P.N.F.C. கால்பந்து கிளப்.பாவாணர் நகர், புதுச்சேரி.
- UNITED -கபடி கிளப், பிச்சவீரன்பேட்,,புதுச்சேரி.
- கார்கில் பெட்டாங்க் கிளப், உழவர்கரை, புதுச்சேரி.

**அனைத்து முக்கியமான விழாக்களுக்கும், மாதாந்திர அடிப்படையில், அன்பு ஆத்ரேயா அறக்கட்டளை மூலம் டாக்டர் அருள் செழியனிடமிருந்து நன்கொடைகள் மற்றும் நிதியுதவிகளைப் பெறும் கோயில் சங்கங்கள்:**

- அருள்மிகு .ஸ்ரீ பூர்ண புஷ்கல சமேத சுந்தர ஐயனார் ஆலயம், செல்லம்பாப்பு நகர், புதுச்சேரி
- புனித ஜெயராகினி அன்னை தேவாலயம் ,உழவர்கரை, புதுச்சேரி.
- மகான் எலுமிச்சை ராமசாமி சித்தர் திருக்கோவில், வடலூர்
- அன்னை ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஆலயம் , மரியாள் நகர் , புதுச்சேரி
- புனித அந்தோனியார் தேவாலயம், உழவர்கரை ,புதுச்சேரி.
- புனித பெரியநாயகி மாதா சிற்றாலயம் ,உழவர்கரை ,புதுச்சேரி.
- மாரியம்மன் கோவில், மூலக்குளம், புதுச்சேரி .
- அன்னை மாரியம்மன் கோவில், உழவர்கரை ,புதுச்சேரி.
- ஜகதாம்பாள் கோவில் ,ஜே ஜே நகர், உழவர்கரை, புதுச்சேரி.
- ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில், எச் .எஸ்.ஆர் . லேஅவுட், பெங்களூர்.

**அன்பு ஆத்ரேயா அறக்கட்டளை மூலம் டாக்டர் அருள்செழியன் வழங்கிய கல்வி உதவி.**

● கல்லூரி கட்டணம் செலுத்தப்பட்டது.இந்திரா காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாண்டிச்சேரி,
●பாண்டிச்சேரி ஸ்ரீ சக்தி மேல்நிலைப் பள்ளியில் ஒரு மாணவருக்கு ஒவ்வொரு ஆண்டும் பள்ளி கட்டணம் வழங்கப்படுகிறது.
●மணக்குள விநாயகர் சட்டக் கல்லூரியைச் சேர்ந்த 6 சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு கட்டணம் செலுத்தப்பட்டது.
2021 முதல் பாண்டிச்சேரி பிரசிடென்சி பள்ளியில் மூன்று மாணவர்களுக்கு பள்ளி கட்டணம் செலுத்தப்பட்டது
●2021 ஆம் ஆண்டு முதல் 8 மாணவர்களுக்கு ஹால் டிக்கெட் பெற தேர்வு கட்டணம் செலுத்தப்பட்டது.
●தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துணை ஆய்வாளர் தேர்வுக்கு ஒரு பெண்ணுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது.
●பாண்டிச்சேரி, உழவர்கரையில் அமைந்துள்ள பல பள்ளிகளுக்கு எழுதுபொருள் நன்கொடையாக வழங்கப்பட்டது.
●2023 ஆம் ஆண்டில் 28 குழந்தைகளுக்கு எழுதுபொருள் பொருட்கள் மற்றும் தேர்வுக் கட்டணத்தை நன்கொடையாக வழங்கப்பட்டது.
●பள்ளிக் கட்டணம், கல்லூரி கட்டணம் என பலவற்றைச் செலுத்தினார், மேலும் பலமுறை மாணவர்களுக்குத் தேவைக்கேற்ப எழுதுபொருட்களை வழங்கினார்.

**குறிப்பு:**
மனிதகுலத்தின் சிறந்த போர்வீரருக்கான ராயல் அகாடமி ஆஃப் குளோபல் பீஸ் சர்வதேச விருதை முனைவர் அருள் செழியன் பெற்றார்.

மேற்கண்ட காரணங்களின் மூலம் முனைவர் அருள் செழியன் ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர் என்பதும், அவரது படிப்பின் மூலம் உயரிய பதவிகளை அடைந்து, படிப்பு ஒன்று மட்டுமே தன் ஆயுதம். வாழ்க்கையில் எவ்வளவு பெரிய இன்னல்கள் வந்தாலும், நாம் முன்னேறி செல்ல வேண்டும், என்பதை நிரூபித்துள்ளார். அவரால் முடிந்த உதவிகளை இயலாத மக்களுக்காக செய்ய வேண்டும். என்ன நேரிட்டாலும் அவரது லட்சியத்தை நோக்கி ஓடிக் கொண்டே இருக்கும் அவரை, நாம் ஒரு முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும்! வாழ்க்கை நமக்கு பல கஷ்டங்களையும் பிரச்சனைகளும் கொடுத்துக் கொண்டே தான் இருக்கும்! அதனால் நாம் துவண்டு விடக்கூடாது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்!

வாழ்க்கையில் ஒரு ஆண் இழக்கக்கூடாதது இளம் வயதில் தன் மனைவியை !ஆனால் அந்த மீலா துயரத்திலும், தன் லட்சியத்திற்காகவும், தன் மகனுக்காகவும், மறுமணம் செய்து கொள்ளாமல், தன் சம்பாத்தியம் அனைத்தையும் நம் நாட்டு மக்களுக்காகவும், அவர்களின் வளர்ச்சிக்காகவும் செலவிட்டு, புதுச்சேரி உழவர் கரை முனைவர் அருள் செழியன் அவர்களைப் பற்றி கூறிய விஷயங்கள், சிறு துளியே இன்னும் பல திட்டங்களையும் வகுத்து இன்னும் பல முன்னேற்றங்களையும், மாற்றங்களையும் ,தன் தொகுதிக்கு கொண்டு வர வேண்டும் என்பதை, தன் லட்சியமாக கொண்டுள்ளார் என்பதை, இதன் மூலம் நாம் அறிந்து கொள்வோம்!!!
**திரு.அருள் செழியன் அவர்களின் வேலை மற்றும் பதவிகள்...**

●தற்போது அமெரிக்காவை தளமாகக் கொண்ட சுகாதார நிறுவனத்தில் மூத்த சைபர் பாதுகாப்பு ஆலோசகராக பணிபுரிகிறார்.

- சைபர் செக்யூரிட்டி மற்றும் சைபர் கிரைமில் மொத்தம் 16 வருட அனுபவம் உடையவர்.

**கூடுதல் பொறுப்புகளாக...**

- இந்திய தேசிய சைபர் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தரநிலைகள் தேசிய சைபர் பாதுகாப்பு ஆராய்ச்சி மையம் (NCDRC) குழுவின் இணை உறுப்பினர்.
- இந்திய காவல் துறை அறக்கட்டளை மற்றும் நிறுவனத்தின் உறுப்பினர்.
- கடந்த 12 ஆண்டுகளாக இந்தியா முழுவதும் உள்ள பல மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச காவல் துறைகளுக்கு இந்தியா முழுவதிலும் உள்ள குற்றங்களை எவ்வாறு குறைப்பது மற்றும் இந்தியா முழுவதும் காவல் துறையை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த ஆலோசனைகளையும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளையும் வழங்குவதன் மூலம் அவர்களுக்கு உதவி வருகிறார்.
- ஊழல் எதிர்ப்பு கவுன்சில் மற்றும் இந்திய மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்.(அரசால் அங்கீகரிக்கப்பட்டது)
- பத்திரிகை கவுன்சில் மற்றும் சமூக நீதி கவுன்சில் இந்தியாவின் உறுப்பினராக இருந்தார். (அரசால் அங்கீகரிக்கப்பட்டது)
- எஃப்.பி.ஐ (FBI-பெடரல் பீரோ ஆஃப் இன்வெஸ்டிகேஷன்) இன் மூன்றாம் தரப்பு இன்ஃப்ராகார்ட் உறுப்பினர்.
- கலிபோர்னியாவின் தேசிய இணைய பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்.
- பல மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான போலீஸ் ஆலோசகர்.
- தமிழ்நாடு, கேரளா கர்நாடக மற்றும் பாண்டிச்சேரிக்கான போலீஸ் உளவுத்துறை மற்றும் மத்திய உள்துறை அமைச்சகம் ஆகியவற்றிக்கு நுண்ணறிவு தகவல் கொடுப்பது.

**அவர் கடந்து வந்த பாதைகள்...**

இளம் வயது முதலே சமூக பற்று மிகுதியாக கொண்டவர். 1996 ஆம் ஆண்டு வாரமலர் இதழில் வந்த முனைவர் சைலேந்திரபாபு ஐபிஎஸ் அவர்களின்" நீங்களும் ஆகலாம் காவல்துறை அதிகாரி" என்ற கட்டுரையைப் படித்து அவரை தனது ரோல் மாடலாக எடுத்துக்கொண்டு இந்திய சிவில் சர்வீஸ் பரீட்சைக்காக படித்துக் கொண்டிருந்தார். காவல் அதிகாரியாகவோ அல்லது ராணுவ அதிகாரியாகவோ ஆக வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது. ஆனால் இந்திய சிவில் சர்வீஸ் பரீட்சையை எதிர்கொண்டு வெற்றி பெற முடியாமல் போனதால், ஆனாலும் கூட அவரது இலக்கை

விட்டு போகக்கூடாது என்று எண்ணி, காவல் துறை பற்றி பல ஆராய்ச்சிகளை செய்ய ஆரம்பித்தார்.

2009 ஆம் ஆண்டு தனது ஆராய்ச்சி முடிவை 5 பக்க ஆவணமாக, புதுச்சேரி காவல்துறைக்கு சமர்ப்பித்தார். அப்பொழுது இருந்த காவல்துறை தலைவர் அருள்செழியன் அவர்களை அழைத்து ,புதுச்சேரிக்கு மட்டும் உங்களை கட்டுப்படுத்திக் கொள்ளாமல், இந்தியா முழுவதும் ஆராய்ச்சி செய்து ஒரு ஆராய்ச்சி ஆவணமாக சமர்ப்பிக்க ஆலோசனை வழங்கினார். இதை உந்துதலாக எடுத்துக்கொண்டு பல தரப்பட்ட மக்களுடன் பழகி, குற்றம் நடக்கும் பின்னணிகளையும் அதை தடுக்கும் முறைகளையும் ,பல காவல்துறை அதிகாரிகளின் துணையோடும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி , 2016 ஆம் ஆண்டில் சமூக குற்றங்களுக்கான காரணங்களை ஆராய்ந்து, குற்ற விகிதத்தை எவ்வாறு குறைப்பது மற்றும் இந்தியா முழுவதும் உள்ள காவல்துறையை மேம்படுத்துவது எப்படி ,என்பது குறித்தும் ,மத்திய உள்துறை அமைச்சகம் போன்ற மத்திய அரசு அமைப்புகளுக்கு பல பரிந்துரைகளை உருவாக்கி அதை சமர்ப்பித்தார்.

இதற்கிடையில், திரு.அருள் செழியன் ஆராய்ச்சி செய்து சமர்ப்பித்த ஆவணம் ,இந்தியா முழுவதும், குற்றங்களை எவ்வாறு குறைப்பது மற்றும் இந்தியா முழுவதும் காவல்துறையை எவ்வாறு மேம்படுத்துவது, இந்திய உச்ச நீதிமன்ற மூத்த *வழக்கறிஞர் ஜஸ்டிஸ் அந்தோணி ராஜ்* வழிகாட்டுதலால், கிராம்டன் இன்டர்நேஷனல் யூனிவர்சிட்டியின் செலக்ஷன் கமிட்டியின் ஆய்வுக்குப் பின் 26 2/2021 அன்று ஹானர்ரி முனைவர் பட்டம் ஹியூமன் ரைட்ஸ் அண்ட் சோசியல் ஜஸ்டிஸ் என்ற பகுப்பாய்வு வகையின் அடிப்படையில் வழங்கப்பட்டது

**<u>பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட அமைப்புகள்...</u>**

•இந்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்,
•இந்திய ஜனாதிபதி செயலகம், துணைத் தலைவர்கள் செயலகம்,
•இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம்,
•இந்திய மனித வளம் மற்றும் மேம்பாட்டு அமைச்சகம்,
•இந்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம்,
•இந்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்,
•இந்திய அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச காவல்துறை தலைவர்கள்,
•இந்திய அனைத்து மாநில முதலமைச்சர்கள் அலுவலகம் மற்றும் ஆளுநர் அலுவலகங்கள்,
•இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பணியகம்,
•இந்திய புலனாய்வுப் பணியகம்,
•இந்திய காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணியகம்,
•இந்திய சர்தார் வல்லபாய் படேல் தேசிய காவல்துறை அகாடமி,
•இந்திய அதிகாரிகள் பயிற்சிப் பள்ளிகள் மற்றும் அதிகாரிகள் பயிற்சி அகாடமிகள் போன்ற மத்திய அரசு அமைப்புகள்

**குறிப்பு:** இந்த பரிந்துரைகள் அனைத்தும் மத்திய அரசின் அமைப்புகள் ஏற்று திரு. அருள்செழியன் அவர்களுக்கு பல பாராட்டுக்களை தெரிவித்துக் கொண்டு, பரிந்துரைகளை செயல்படுத்த அனைத்து மாநிலத்திற்கும் கோப்புகளாக அனுப்பிவைத்தது. இதன் விளைவாக பல்வேறு மாநிலங்களின் காவல் துறையுடன் சேர்ந்து வேலை செய்ய அருள்செழியன் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு உருவாகியது.

**<u>எதிர்கால திட்டங்கள்:</u>**

உதவி செய்பவன் கூட உயர்ந்த இடத்தில் இருந்தால்தான்,உதவி செய்பவருக்கும், செய்யும் உதவிக்கு மரியாதை! என்பதற்கு இணங்க, பட்டங்கள் பல பெற்று, தன் கல்வி நிலையை உயர்த்திக் கொண்டு,
தான் வாழும் சமுதாயத்தில் தன்னலமற்ற பல தொண்டுகளை செய்யவும், **புதுச்சேரியை குற்றமற்ற மாநிலமாக மாற்ற வேண்டும்** என்பதே தன் தலையாய நோக்கமாக கொண்டுள்ளார்...

**<u>திரு அருள் செழியன் அவர்களின் படிப்பு:</u>**

- B.Tech – Bachelor of Technology – IT
- PMP – Project Management Professional
- CISSM – Certified Information Systems Security Manager
- CTIA – Cyber Threat Intelligence Analyst
- CCNA – Cisco Certified Network Associate
- ITIL V3 – Information Technology Infrastructure Library
- MDCA – Master Diploma in Computer Applications
- DR - Honorary Doctorate in Human Rights and Social Justice

**முனைவர் திரு அருள் செழியன் அவர்களை பற்றி தெரிந்துகொள்ள – தொடருங்கள்**

**முகநூல் –** https://facebook.com/arul.sezhian
**அறக்கட்டளை முகநூல் – https://www.facebook.com/share/19UxwSZWdi/?mibextid=wwXIfr (Anbu Athreya Foundation & Charitable Trust**